பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 06 2024 **FRIDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- புதிய குற்றவியல் சட்டங்கள், நீதி முறைக்கு முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.
- நாட்டை சுயசார்பு அடையச் செய்வதில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜித்தன் ராம் மஞ்சி கூறியுள்ளார்.
- கேரளாவில் கனமழை பெய்து வருவதை அடுத்து இன்று ஒன்பது மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இந்திய தடகள வீராங்கனை கிரண் பஹல், தகுதி பெற்றுள்ளார்.
- இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

புதிய குற்றவியல் சட்டங்கள், நீதி முறைக்கு முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன சூழலில் சட்ட சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றார்.

காலனி கால சட்டங்களில், தண்டனைக்கு முக்கியத்துவம் அளித்த சூழ்நிலைக்கு மாறாக, புதிய குற்றவியல் சட்டங்களில் நீதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எந்தவொரு சட்டப்பிரச்சினைக்கும் சுமுகமான தீர்வு காண்பதே சிறந்த தீர்வு என்று திரு. அர்ஜுன்ராம் மெக்வால் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

நாட்டை சுயசார்பு அடையச் செய்வதில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜித்தன் ராம் மஞ்சி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில்துறையினருக்கு கடனுதவி வழங்குதல், மேம்படுத்தப்பட்ட சந்தை அணுகுமுறை, மின்னணு வர்த்தகத்தை பின்பற்றுதல், நவீன தொழில்நுட்பங்கள் மூலம் உற்பத்தியை அதிகரித்தல், கதர் மற்றும் கயிறு தயாரிப்பு தொழில்களுக்கு உறுதுணையாக இருத்தல், மகளிர் மற்றும் கைவினைஞர்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவை அரசின் முக்கிய நடவடிக்கையாக இருக்கும் என்றும் திரு. ஜித்தன் ராம் மஞ்சி தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய அமைச்சகங்களில் பயிற்சி அதிகாரிகளாக பணியாற்றிய குடிமைப்பணி அதிகாரிகளுடன், மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கலந்துரையாடினார்.

மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் செயல்பாடுகளை, குடிமைப்பணி பயிற்சி அதிகாரிகள் முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் இந்த பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அதன்மூலம் உயர்நிலை அதிகாரிகளுடன் கலந்துரையாடி, பல்வேறு சூழ்நிலைகளில் பணியாற்றுவது குறித்து இளம் அதிகாரிகள் கற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இதுபோன்ற பயிற்சிபெற்ற அதிகாரிகள், பெருந்தொற்று காலத்தில் மாவட்ட ஆட்சியர்களாக பணியாற்றிய போது, அவர்கள் திறம்பட செயல்பட்டதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

நில மோடி வழக்கில், ஜார்க்கண்ட் முன்னாள் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரனின் நீதிமன்றக் காவலை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீட்டித்து ராஞ்சியில் உள்ள சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட திரு. ஹேமந்த் சோரனும், மற்ற 11 பேரும் காணொலி காட்சி வாயிலாக நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போது, நீதிபதிகள் இவ்வாறு உத்தரவிட்டனர்.

இந்த வழக்கின் விசாரணை அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

கேரளாவில் கனமழை பெய்து வருவதை அடுத்து, பத்தனம்திட்டா, இடுக்கி, வயநாடு, திருவனந்தபுரம் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களுக்கு இன்று மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர் அப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். நிவாரண முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆலப்புழா, கோட்டயம் மாவட்டங்களில் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இரவுநேர பயணத்திற்கும், மலைப்பகுதி சுற்றுலாவிற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக, வேளாண் பயிர்கள் பெருமளவில் சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாழ்வான பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

மலைப்பகுதிகளில் நிலச்சரிவு முன்னெச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கேரள, கர்நாடகா, லட்சத்தீவு கடல்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று முதல் 2 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அந்த மையத்தின் இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன், கோவை மற்றும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகள், தெற்கு மற்றும் மத்திய வங்கக்கடல் பகுதிகள் அதையொட்டி ஆந்திர கடலோரப் பகுதிகள் மற்றும் கேரள – கர்நாடக கடலோரப் பகுதிகளில் இன்று முதல் நான்கு நாட்களுக்கு சூறவாளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

இலங்கையின் கொழும்புவில் நடைபெற்ற காமன்வெல்த் உள்ளாட்சி மன்ற கூட்டமைப்பின் கூட்டத்தில் இந்தியாவின் சார்பில் பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் டாக்டர் சந்திரசேகர் குமார் பங்கேற்றார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கூட்டத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் காமன்வெல்த் நாடுகளின் மகளிருக்கான எதிர்கால பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பிராந்திய அளவிலான அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

காமல்வெல்த் ஆசிய அமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

மகளிருக்கு அரசியல் பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலம் சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே இந்த காமன்வெல்த் உள்ளாட்சி மன்ற கூட்டமைப்பின் நோக்கமாகும்.

>>>>><<<<<

கம்போடியாவின் குடிமைப்பணி அதிகாரிகளுக்கான 5வது திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் **Mussori**–யில் நேற்று தொடங்கியது.

கம்போடியா குடிமைப்பணி அமைச்சகத்தின் இணைச் செயலாளர், இயக்குநர் உள்ளிட்ட 40 அரசு அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

இதில் தொடக்கவுரையாற்றிய தேசிய நல்லாட்சி மையத்தின் தலைமை இயக்குநர் திரு. ஸ்ரீநிவாஸ், குடிமக்களுக்கு அரசுடன் இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் தொழில்நுடபத்தின் பங்கினை எடுத்துரைத்தார்.

இந்திய அரசின் சார்பில் அளிக்கப்படும் இந்த பயிற்சிக்கு கம்போடிய குடிமைப்பணி அதிகாரிகள் குழுவின் தலைவர் திரு. மாம்போயுக் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**>>>>><<<<<**

குடியுரிமை திருத்த சட்டத்தின் கீழ், மத்தியப்பிரதேச மாநிலத்தில் முதல்முறையாக 3 பேருக்கு இந்திய குடியுரிமை சான்றிதழை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் வழங்கினார்.

இவர்களில் இரண்டு பேரி பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் வசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்ற ஒருவர் பங்களாதேஷை சேர்ந்தவர் ஆவார்.

மத்திய பிரதேச மாநிலத்தில் இதுவரை 61 பேர் குடியுரமை சான்றிதழ் பெற விண்ணப்பித்துள்ளனர்.

**>>>>><<<<<**

ஹிந்தி மொழியின் மேம்பாட்டிற்காக ஐ.நா-வின் செய்தி மற்றும் ஊடகப் பிரிவிற்கு ஒன்று புள்ளி ஒன்று ஆறு மில்லியன் டாலர் நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது.

இதற்கான காசோலை நேற்று வழங்கப்பட்டது.

**>>>>><<<<<**

தமிழகத்தில் பொதுமக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்ய அனைத்து நகரங்களிலும் கூட்டுறவு மருந்தக சேவை விரிவுபடுத்தப்படும் என்று மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு அவர் பதிலளித்துப் பேசினார்.

நவீன கூட்டுறவு தொழில்நுட்பங்களை இளைஞர்களிடையே அறிமுகப்படுத்தும் வகையில், சென்னையில் கூட்டுறவு தொழில்நுட்பம் உருவாக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கூட்டுறவு சங்கங்கள், கூட்டு வங்கிகள் மூலம் இணையவழி கடன் வழங்கும் வசதி ஏற்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் பெருநகரங்களில் காய்கனி அங்காடிகள் அமைக்கப்படும் என்று திரு. பெரியகருப்பன் தெரிவித்தார்.

>>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இந்திய தடகள வீராங்கனை கிரண் பஹல் தகுதி பெற்றுள்ளார்.

பஞ்ச்குலாவில் நடைபெற்ற தேசிய மகளிர் சீனியர் 400 மீட்டர் ஓட்டப் பிரிவின் அரையிறுதியில் பந்தய தூரத்தை 50 புள்ளி ஒன்பது இரண்டு வினாடிகளில் கடந்து, இந்த தகுதியை பெற்றார்.

>>>>><<<<<

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வரும் தென்னாப்பிரிக்க அணி இந்த ஒரு டெஸ்ட் போட்டி முடிவடைந்தவுடன் மூன்று டிவென்டி டிவென்டி போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற மூன்று ஒருநாள் ஆட்டங்களிலும் இந்தியா வெற்றிபெற்றது.

**>>>>><<<<<**

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கயானாவில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில், அந்த அணி 68 ரன் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 171 ரன் எடுத்தது.

கேப்டன் ரோஹித் சர்மா 57 ரன்னும், சூர்யகுமார் யாதவ் 47 ரன்னும் எடுத்தனர்.

172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து, 16 புள்ளி நான்கு ஓவரில் 103 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய தரப்பில் அக்ஸர் பட்டேல், குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், பும்ரா 2 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இந்தியா – தென்னாபிரிக்காவை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பிரியன்ஷூ ரஜாவத், மல்விகா பன்சோட் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் ரஜாவத் 21-18, 21-16 என்ற செட்கணக்கில் தைவானின் **Yu Kai Huang**–ஐ வென்றார்.

மகளிர் பிரிவில் மால்விகா பன்சோட் 15-21, 21-19, 21-14 என்ற செட்கணக்கில் செக் குடியரசின் **Tereza Svabikova**-வை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் இந்தியாவின் **Treesa Jollly – Gayathri Gopichand** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு முந்தைய ஆட்டத்தில் அந்த இணை 16-21, 21-11, 21-19 என்ற செட்கணக்கில் தைவானின் **Pei Shan – Tzu Hung** இணையை வென்றது.

**>>>>><<<<<**